





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 2019

We Are Here..!! To Guide You..!!







# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 17.12.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- விருதுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்



We Shine Academy™









The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

# தமிழக நிகழ்வுகள்

- சென்னை மாவட்டத்தில் ஏழைப் பெண்களுக்கு ரூ.7.63 கோடியில் திருமண நிதி உதவி திட்டம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.
    - தமிழக அரசின் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவி திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்பட்டது.
    - இதே போன்று 10-ம் வகுப்பு படித்த ஏழைப் பெண்களுக்கு “தாலிக்கு தங்கம்” திட்டத்தின் கீழ் 8 கிராம் தங்கமும் 25,000 பணமும் வழங்கப்பட்டது.
    - **செய்தி துளிகள்:**
        - தமிழக அரசு கடந்த 1989-ஆம் ஆண்டு ஏழைப் பெண்களின் திருமண உதவிக்காக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண திட்டத்தை தொடங்கியது.
        - ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு திருமண உதவி திட்டம் ஏழை விதவைப் பெண்களின் மகள்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டமாகும்.
        - **விதவை மறுமண திருமணத்திற்கு** நிதியுதவி வழங்க **டாக்டர். தர்மாம்பாள் அம்மையார் நினைவு திட்டம்** செயல்படுகிறது.
        - கலப்பு திருமணங்களுக்கு நிதியுதவி வழங்க டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்பு திருமண நிதியுதவித் திட்டம் செயல்படுகிறது.

## தேசிய நிகழ்வுகள்

- **உயர் ஆற்றல் எரிசக்தி தொழில்நுட்ப மாநாடு சென்னை ஐஐடி யில் நடைபெற்றது.**
  - இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனம்-சென்னை (ஐஐடி) மற்றும் சதீஷ் தவண் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் இணைந்து மாநாட்டை நடத்துகின்றன.
  - இது ராக்கெட் தொழில்நுட்பத்துக்கும், வெடிப்பொருள்களுக்கும் பயன்படுத்தப்படும் உயர் ஆற்றல் கொண்ட எரிசக்தி தொழில்நுட்பம் சார்ந்த சர்வதேசக் கருத்தரங்கமாகும்.
  - **செய்தி துளிகள்**:
    - சதீஷ் தவண் விண்வெளி ஆய்வு மைய இயக்குநர் ஏ.ராஜராஜன்
    - டிஆர்டிஓ ஏவுகணை திட்ட இயக்குநர் எம்.எஸ்.ஆர். பிரசாத்

## விருதுகள்

- **என்எல்சி** இந்திய நிறுவனத்திற்கு **அகில இந்திய மக்கள் தொடர்புத் துறை சார்பில் 2 தேசிய விருதுகள்** வழங்கப்பட்டுள்ளது.
  - சிறந்த சமூகப்பொறுப்புணர்வுடன் திகழும் நிறுவனத்துக்கான விருது மற்றும் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தை சிறப்பாக அமல்படுத்தி வரும் விருது ஆகிய விருதுகள் வழங்கப்பட்டன.
  - 41-வது அகில இந்திய மக்கள் தொடர்பு துறை கருத்தரங்கம்

ஹைதராபாத் நகரில் நடைபெற்று வருகிறது.

- **செய்தி துளிகள்:**
    - **இந்திய மக்கள் தொடர்பு சங்க தலைவர் அஜித் பதக்**
    - இந்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் ஒன்றான நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் "நவரத்னா" அந்தஸ்து பெற்ற மத்திய நிறுவனமாகும்.
    - தொடர்ந்து 5-ஆவது முறையாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை சிறப்பாக அமல்படுத்தியதற்கான விருது என்எல்சி நிறுவனம் பெறுகிறது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **ஐசிசி டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் விராட் கோலி முதலிடம்** பெற்றுள்ளார்.
    - சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் டெஸ்ட் பேட்ஸ்மேன் தரவரிசையில் 928 புள்ளிகளுடன் விராட் கோலி முதலிடத்தில் உள்ளார்.
    - பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் பாட் கம்மின்ஸ் முதலிடத்தில் உள்ளார்.
    - ஆல்ரவுண்டர்கள் தரவரிசையில் ஜேசன் ஹோல்டர் முதலிடத்தில் உள்ளார்.
    - **செய்தி துளிகள்**:
        - ஐசிசி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் பட்டியலில் இந்தியா 360 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளது.

WeShine Academy™

## முக்கிய தினங்கள்

- **டிசம்பர் - 17 தேசிய ஓய்வூதியர் தினம்**
    - காரணம் - 1982-ஆம் ஆண்டு டிசம்பர் 17-ஆம் தேதி இந்திய உச்சநீதிமன்றம் ஓய்வூதியம் குறித்த வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பினை நினைவு கூறும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.
    - இந்திய அரசு தேசிய ஓய்வூதிய திட்டத்தை 2009-ம் ஆண்டு நடைமுறைக்கு கொண்டு வந்தது.

## திருக்குறள்

**குறள் எண் : 49**

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் : இல்வாழ்க்கை

**அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அ.்.தும்**
**பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.**

**விளக்கம் :** அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டதே இல்வாழ்க்கை. அதுவும் பிறர் பழிக்கும் தீமைகள் இல்லையானால் சிறப்புடையதாகும்.

We Shine Academy™